சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் "ஜகத் குமார சிசு நென மன்றம்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் இடையறா வழியுரிமையைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும், அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்படுவதற்கான நோக்கம் பின்வருமாறு இருக்க வேண்டுமென இதன் மூலம் அறிவிக்கப் படுகின்றது:-

(அ) இலங்கை மாணவச் செல்வங்களின் அறிவாற்றலை வளர்த்து அவர்களை நற்பிரஜைகளாக சமுகமயப் படுத்துதல்;

(ஆ) நெறிமுறைகளுடன் கூடிய அரசியல் வேலைத்திட்டத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை வழங்குவதற்கும் திரு ஜகத் குமார சுமித்ர ஆரச்சி அவர்களுடன் ஒன்றிணைந்த மக்களுடனான ஒரு சமுகத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

(இ) அரசியல் பொருளாதாரம் கல்வி மற்றும் கலாசாரம் போன்ற அனைத்து பொது நடவடிக்கைகளிலும் திரு ஜகத்குமாரவுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் இந்த அறக்கட்டளையின் அதிகபட்ச வலிமை மற்றும் பங்களிப்புடன் பங்கேற்பது;

(ஈ) ஒவ்வொரு குழந்ததைக்கும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (UNICEF) நோக்கங்களுக்கேற்ப இலங்கை மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் கலாசார விழுமியங் களை பாதுகாப்பதற்கும் ஏற்பாடு செய்தல்;

(உ) கற்றல் சார்ந்த கல்வித்திறன்களை மேம்படுத்தத் தேவையான வசதிகளை சிறுவர்களுக்கு வழங்குதல்;

(ஊ) கல்வியை முதன்மையாகக் கொண்டவர்களுக்கு கல்வி செயற்பாட்டை விருத்தி செய்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை, அனுசரணை மற்றும் உதவிகளை வழங்குதல்;

(எ) குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து சமூகத்தில் சிறப்பு பிரச்சினைகளை எதிர்கொள்வது மற்றும் அந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான பணிகளைத் தயாரித்தல்;

(ஏ) சிறப்புத் திறமையைக் காட்டும் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்காக புலமைப் பரிசில்கள், உதவிகள் மற்றும் ஆதரவுகளை வழங்குதல்; அத்துடன்

(ஐ) மாணவர்களின் நலனுக்காக செயற்படவேண்டிய நிர்வாகக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் தவிசாளர், செயலாளர், பொருளாளர் உட்பட 7 பேரைக் கொண்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைய வலுவிலுள்ள விதிகளுக் கிணங்க தெரிவு செய்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் ஒன்றின் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய நிருவகிக் கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப உறுப்பினரான ஜகத் குமார ஆரச்சி அவர்கள் இவ் அறக்கட்டளையின் ஆயுட்கால தலைவராக செயற்படும் அதேநேரம் அவர் இராஜினாமா செய்யும் பட்சத்தில் அவரால் பெயர் குறிப்பிடப்படுபவர் தலைவராக செயற்பட வேண்டியதோடு அதன் பின்னர் பணிப்பாளர் சபையினால்

